# ஆண்டு அறிக்கை

# 2022- 23

நம்பர் 10, கிழக்குத்தெரு, கொளத்தூர், சென்னை- 600 099,

தொலைபேசி: 044 - 25501257,மின்அஞ்சல் : tamilnaduwomenscollective@gmail.com,

இணையதளம்: www.womenscollective.net

## தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின்

# ***2022- 23 ஆண்டு அறிக்கை***

எமது அமைப்பு 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் தேதி ஜாதி மத இன மொழி அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒத்த கருத்துடைய பெண்கள் தலைமைத்துவத்தில் செயல்பட்டு வரும் 12 தன்னார்வ அமைப்புகளை ஆறு மாவட்டங்களில் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட பெண்கள் இணைப்பு குழு இன்று கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, மதுரை, தேனி ,திண்டுக்கல், நீலகிரி, சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, தர்மபுரி ,கிருஷ்ணகிரி ,வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை உட்பட 21 மாவட்டங்களில் வளர்ந்து நிற்கிறது.

பெண்கள் இணைப்பு குழு ஒடுக்கப்பட்ட ஓரங்கட்டப்பட்ட பெண்கள் ,பெண் விவசாயிகள், குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், ஆண்கள், ஆண் விவசாயிகள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநர் இவர்களை இலக்கு மக்களாகக் கொண்டு சமூக கலாச்சார ஜாதி மத இன மொழி பாலியல் அரசியல் பொருளாதார பாகுபாடற்ற தரமான கல்வி சுகாதாரம் பாதுகாப்பான சுற்றுச்சூழல் உணவு உத்தரவாதம் உறுதி செய்யப்பட்ட வயது திறமை பாலியல் மத சிறுபான்மையினர் உள்ளடங்கிய அனைத்து தரப்பினர் உரிமைகளும் நிலைநாட்டப்பட்ட பேரிடர் தயார் நிலை அடைந்த நீடித்த நிலைத்த வளர்ச்சியோடு கூடிய மனிதநேயம் உள்ள சமத்துவ சமதர்ம சமுதாயத்தை சாத்தியமாக்குவதை தொலைநோக்காக கொண்டு மக்கள் பங்கேற்பு அணுகு முறையை சித்தாந்தமாக கொண்டு மனிதநேய அடிப்படையில் கீழிருந்து மேல் நோக்கிய திட்டமிடலில் அனைவரும் சமம் என்ற உயரிய லட்சியத்தை அடைய பெண்கள் தலைமைத்துவம் கூட்டு தலைமை கூட்டு முடிவு பொறுப்புகள் பகிர்வு வெளிப்படை தன்மை மற்றும் தன்னை பலப்படுத்தி பெண்களை பலப்படுத்துவதை நெறிமுறைகளாக வகுத்து,

மக்கள்பங்கேற்பு ஆய்வு

விழிப்புணர்வு கல்வி

ஒருங்கிணைத்தல்

பயிற்சி வெளியிட பயிற்சி

கூட்டமைப்பு ஏற்படுத்துதல்

தோழமை

பிரச்சாரம்

அணிதிரட்டுதல்

வழக்குரைத்தல்

கருத்தரங்கு

மாநாடு இவற்றை வழிமுறைகளாக கொண்டு 29 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் 21 நாடாளுமன்ற தொகுதிகளில் 50 சட்டமன்ற தொகுதிகளில் 21 மாவட்டங்களில் ரெண்டு மாநகராட்சிகளில் 57 தாலுகாக்களில் 58 ஒன்றியங்களில் 12 நகராட்சிகளில் 27 பேரூராட்சிகளில் 397 பஞ்சாயத்துகளில் 1023 கிராமங்களில்

பெண்கள் சங்கங்கள் பெண் விவசாயிகள் சங்கங்கள் ஆண் விவசாய சங்கங்கள் சிறுவர் பஞ்சாயத்துக்கள் இளைஞர்கள் வளர் இளம் பெண்கள் சங்கங்கள் முதியோர் உரிமை சங்கங்கள் பெண்கள் கூட்டு விவசாய சங்கங்கள் களஞ்சியம்அமைப்புசாரா தொழிலாளர்கள் சங்கங்களாக ஒருங்கிணைக்கப்பட்டு இலக்கு மக்களின் உணவு உரிமை வாழ்வாதார உரிமை வள ஆதார உரிமை நில உரிமை குழந்தைகள் உரிமை இளைஞர்களின் கல்வி வேலை வாய்ப்பு உரிமை முதியோர் உரிமை பாதுகாப்பான சுற்றுச்சூழல் உரிமைகள் பாதுகாக்க பிரச்சாரம் மற்றும் வழக்குரைத்தல் செய்து வருகிறது.

# பெண்கள் சங்கம் :

கிராம அளவிலான பெண்கள் சங்கங்களை பலப்படுத்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறைகளை எதிர்த்து குரல் கொடுப்பதற்காக

ஆலோசனை வழங்குவதற்காக சட்டரீதியாக வழிநடத்துவதற்காக ஒவ்வொரு கிராமங்களிலும் பாலின சம நீதி குழுக்களை உருவாக்கி வருகிறது 21 மாவட்டங்களில் 30785 உறுப்பினர்களைக் கொண்ட 1037 பெண்கள் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. 140 ஆண்கள் பாலியல் சமநீதி குழுக்களும் 202 பெண்கள் பாலின சமநீதி குழுக்களும் உருவாக்கப்பட்டு ள்ளது. ஒவ்வொரு மாதமும் கிராம சங்க கூட்டமும் வட்டார கூட்டமைப்பு கூட்டமும் மூன்று மாதம் ஒரு முறை மாவட்ட கூட்டமைப்பு கூட்டமும் நடத்தப்படுகிறது கூட்டமைப்புகளுக்கு பல்வேறு பயிற்சிகள் கொடுக்கப்பட்டு கூட்டமைப்பை வலுப்படுத்தி வருகிறது.

# அறிவு பகிர்வு :

தனிமனித மனநிலை மாற்றம் தான் நடத்தையில் மாற்றம் கொண்டு வரும் எண்ணங்களை தெளிவுபடுத்த சிந்தனைகளில் மாற்றம் வர மக்கள் பங்கேற்பு அணுகுமுறை, ஆய்வு ,சமூகப் பகுப்பாய்வு, பெண்கள் குழந்தைகள் உரிமை/ சட்டங்கள், ஆற்றுப்படுத்துதல், சேமிப்பு கடன் நிர்வாகம், பஞ்சாயத்து ராஜ் சட்டம், புதிய பொருளாதாரக் கொள்கை, சுற்றுச்சூழல், உலக வெப்பமாதல், பருவ கால மாற்றங்கள், சிறுதானியம், நீர் மேலாண்மை, இயற்கை விவசாயம், சூழியல் விவசாயம், கூட்டு விவசாயம், கலப்பு பயிர் விவசாயம், மானாவாரி விவசாயம் மற்றும், பாதுகாப்பான உணவு போன்ற அடிப்படை பயிற்சிகள் மற்றும் வெளியிட பயிற்சிகள் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

## பெண்களின் பொருளாதார மேம்பாடு:

பெண்களின் பொருளாதார அந்தஸ்தை மேம்படுத்த கந்து வட்டியில் இருந்து விடுபட, கடன் பிடியிலிருந்து வெளிவர கடந்த 27 ஆண்டுகளாக சேமிப்பு குழுக்களை உருவாக்கி வங்கியோடு தொடர்பு ஏற்படுத்தி வங்கிக் கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டு கடன் பிணையை குறைத்து கைத்தொழில் சிறு தொழில் செய்யும் நிலைக்கு மேம்பட்டு உள்ளார்கள் பெண்கள் பெயரில் சொத்து வாங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கி வருகிறது உறுப்பினர்கள் தனிநபராகவும் கூட்டாகவும் வருமானம் வரக்கூடிய தொழில் செய்ய ஆரம்பித்து குடும்ப பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுத்து வரும் நிலையில் இன்று ஒவ்வொரு மாவட்டங்களிலும் நூற்றுக்கணக்கான மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்கள் கந்துவட்டி நிறுவனங்களாக செயல்பட்டு சுய உதவி குழுக்களை உடைத்து கடன் குழுக்கள் மூலம் அவர்கள் உழைப்பை சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள் இது பெண்களின் பொருளாதார சுதந்திரத்திற்கு தடையாக இருக்கிறது கடன் சுலபமாக கிடைப்பதால் அதிகமாக கடன் பெற்று கட்ட முடியாமல் வீடு சொத்துக்களை விற்று கடனைஅடைக்க வேண்டிய சூழலில் தள்ளப்பட்டுள்ளார்கள் கடனை அடைக்க முடியாமல் இடம்பெயர்ந்து வெளியூர்களுக்கு செல்கிறார்கள். கடன் அடைக்கவே திரும்பத் திரும்ப அவர்கள் பெயரிலும் மற்றவர்களின் பெயரிலும் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனத்தில் கடன் பெறுகிறார்கள் நுண் நிதி நிறுவனங்களை தடை செய்தால் மட்டுமே பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைய முடியும்.என்பது நிதர்சனமான உண்மை.

## சிறுவர் பஞ்சாயத்து:

இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் நம் நாட்டை ஆளுகின்றவர்களாக நிர்வாகிப்பவர்களாக வழிநடத்துபவர்களாக கற்றுக் கொடுப்பவர்களாக தலைமைப் பண்புள்ளவர்களாக சமுதாய அக்கறை கொண்டவர்களாக மற்றவர்களுக்காக குரல் கொடுப்பவர்களாக அவர்களின் தகவுகளை, மதிப்பீடுகளை வளர்த்தெடுக்க ஒவ்வொரு கிராமங்களிலும் 14 வயதிலிருந்து 18 வயது வரை உள்ள சிறுவர்களை ஒருங்கிணைத்து சிறுவர் பஞ்சாயத்தாக உருவாக்கப்பட்டுள்ளது அவர்களுக்கு வட்டார மாவட்ட மாநில அளவில் இணைய வழியாகவும் நேரடியாகவும் முகாம்கள் நடத்தப்பட்டு அவர்களுக்கு தலைமைத்துவம், ஆளுமை திறன் வளர்ப்பு, பஞ்சாயத்து கிராம சபை, சமூகப் பகுப்பாய்வு, பாலியல் பாகுபாடு, பாலியல் கல்வி, யோகா, பேரிடர் மேலாண்மை, நடனம் கவிதை கட்டுரை பேச்சு பாடல் போன்ற திறன்களை வளர்த்தெடுப்பதற்கான பல்வேறு பயிற்சிகள் ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கப்பட்டு வருகிறது இந்த ஆண்டு மே மாதத்தில் 165 பெண் சிறுவர்களுக்கான மூன்று நாள் முகாம் சென்னை மணப்பாக்கம் இக்க்ஷா பயிற்சி மையத்தில் நடைபெற்றது டிசம்பர் மாதத்தில் ஆண் சிறுவர்கள் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் சென்னையில் நடைபெற்றது ஒவ்வொரு மாதமும் நாலாவது ஞாயிற்றுக்கிழமை இணைய வழியாக மாநில தலைவி ஷுலு அவர்கள்

வெவ்வேறு தலைப்புகளில் பயிற்சி எடுத்து வருகிறார்கள் சிரிப்பு யோகா பேரிடர் மேலாண்மை நடன பயிற்சி கட்டுரை கவிதை எழுத பயிற்சி பாடல் பேச்சு போன்றவற்றிற்கும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு ஆளுமை திறன் வளர செய்கிறது. 21 மாவட்டங்களில் 9464 சிறுவர் பஞ்சாயத்து உறுப்பினர்களை கொண்ட 552 சிறுவர் பஞ்சாயத்து சங்கங்கள் கட்டப்பட்டுள்ளது.

# முதியோர் சங்கம்:

சமுதாய வளர்ச்சிக்கு தங்களின் உழைப்பையும் அனுபவஅறிவையும் கொடுத்த முதியோர்களையும் அரவணைத்து அவர்கள் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டியது என்ற எண்ணத்தில் உறுவாக்கப்பட்ட 415 முதியோர் உரிமை சங்கங்களில் 5595 உறுப்பினர்கள் உள்ளனர் முதியோர் பென்ஷன் வாங்க உதவி வருகிறது ஒவ்வொரு மாதமும் முதியோர்கள் சங்க கூட்டம் நடத்தி அவர்கள் பேசுவதற்கான ஒரு தளத்தை உருவாக்கி வருகிறது உலக முதியோர் தின நாட்களில் முதியோர்காண மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. முதியோர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தி அவர்களுடைய உடல் மனரீதியாக ஆற்றுப்படுத்துதல் செய்து வருகிறது.

# களஞ்சியம் அமைப்புசாரா தொழிலாளர்கள் சங்கம்:

பெண்கள் இணைப்பு குழுவில் உறுப்பினராக உள்ள ஒருங்கிணைக்கப்படாத அமைப்பு சாரா தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும் அரசின் சட்ட சலுகைகளை பெறவும் களஞ்சியம் அமைப்புசாரா தொழிற்சங்கம் பதிவு செய்யப்பட்டு உறுப்பினர்களை நலவாரியத்தில் இணைக்கும் பணி கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது மறுப்பதிவிற்காகவும் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்காகவும் இணைய வழியாக செய்யும் பணி சற்று காலதாமதமாகவே செய்ய முடிகிறது.

# களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம்:

80% விவசாய வேலைகளில் ஈடுபடும் பெண் விவசாயிகள் குறிப்பாக விவசாயிகள், விவசாயக் கூலிகள், கால்நடை வளர்ப்போர், மீன் தொழில் செய்பவர்கள், உப்பளத்தொழிலாளர்கள், காடுகளில் பொருள் சேகரிப்போர் விவசாயிகளாக அங்கீகாரம் கிடைக்கப்பெற நிலங்கள் வளங்களின் வாய்ப்பும் கட்டுப்பாடும் பெண்களுக்கு கிடைக்கப் பெற்றால்தான் விவசாயம் வளம் பெறும் நாடு நலம் பெறும் நாட்டின் உணவு இறையாண்மை காக்கப்படும் என்ற உயரிய நோக்கத்தில் 16 ஆண்டுகளாக பெண் விவசாயிகளை ஒருங்கிணைத்து உழவர் அட்டை இஷான் கிரெடிட் கார்டு KCC பெற்று கொடுத்து கால சூழ்நிலைக்கு ஏற்ற விவசாயம் செய்ய பல்வேறு பயிற்சிகள் கொடுத்து குடும்ப உணவு உத்தரவாதத்தை உறுதி

செய்ய ஊக்கப்படுத்தி வருகிறது. 20 மாவட்டங்களில் 30131 உறுப்பினர்களைக் கொண்ட 1050 பெண் விவசாய சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு 2999 இயற்கை விவசாயிகள் 1395 சூழியல் விவசாயிகள் 3656 சிறுதானிய விவசாயிகளையும் உருவாக்கியுள்ளது.

# விதை சேமிப்பு:

விவசாயத்தின் அடிப்படையான விதைகள் குறிப்பாக பாரம்பரிய விதைகளை நம் மூதாதையர்களின் அறிவை பயன்படுத்தி சேமித்து பராமரித்து பகிர்ந்து கொடுக்க கிராமங்களில் வட்டாரங்களில் மாவட்டங்களில் பாரம்பரிய விதை திருவிழாக்கள் மட்டுமல்ல உணவு திருவிழாக்கள் ஒவ்வொரு ஆண்டும் விதைக்கும் பருவத்திற்கு முன்பாக நடத்தப்பட்டு வருகிறது நம்முடைய பாரம்பரிய விதைகள் நம் மண்ணுக்கு ஏற்ற பருவத்திற்கு ஏற்ற சூழலுக்கு ஏற்ற கலாச்சாரத்திற்கு ஏற்றது ஆதலால் பாரம்பரிய விதைகளை மீட்டெடுத்து நாம் பயிர் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த திருவிழாக்களை நடத்தி வருகிறது பள்ளி கல்லூரிகளிலும் சிறுதானிய விதைகளை பற்றிய விழிப்புணர்வை கொடுத்து சிறுதானிய பண்டங்கள் செய்முறை பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது அதற்கான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் கொடுத்து வருகிறது. இந்த ஆண்டு 53 விதை திருவிழாக்கள் 3782 உறுப்பினர்கள் பங்கேற்புடன் நடத்தப்பட்டது 23 உணவு திருவிழாக்கள் 1526 பெண் விவசாயிகள் பங்கேற்பில் நடைபெற்றது.

# பெண்கள் கூட்டு விவசாய குழுக்கள்:

விவசாயக் கூலிகள் தனித்து வாழும் பெண்கள், மற்றும் விதவைகள் குடும்ப உணவு உத்தரவாதத்தையும் கவனத்தில் கொண்டு கிராமங்களில் நிலங்களை குத்தகை வாங்கி இயற்கை விவசாய முறையில் உணவுக்கான உற்பத்தி பயிர்களை செய்ய ஊக்கப்படுத்தி வருகிறது 20 மாவட்டங்களில் 187 பெண்கள் கூட்டு விவசாய குழுக்களில் 1303 உறுப்பினர்கள் உள்ளனர் 153.89 ஏக்கர் நிலத்தில் சிறுதானியங்கள் பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள் காய்கறி கீரைகள் இயற்கை விவசாயம் முறையில் உற்பத்தி செய்து குடும்ப தேவைக்காக பயன்படுத்தி வருகிறார்கள் அதிகமாக இருக்கக்கூடிய உற்பத்தி பொருள்களை அருகில் உள்ள மற்ற உறுப்பினர்களுக்கு கொடுத்து வருகிறார்கள் இதன் மூலம் ஒவ்வொரு குடும்பத்தின் மூன்று முதல் ஆறு மாத உணவு தேவையை உறுதி செய்து வருகிறார்கள்.

நிலம் குத்தகைக்கு கொடுப்பவர்கள் திரும்ப வாங்கிக் கொள்வதால் நிலம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் அந்தந்த பஞ்சாயத்து பயன்படுத்தாத தரிசு நிலங்கள் மேலும் கோயில் நிலங்கள் பஞ்சமி நிலங்கள் பூமிதான நிலங்கள் நீண்ட கால குத்தகைக்கு வழங்க கோரி பஞ்சாயத்து மற்றும் மாவட்ட ஆட்சியர் சட்டமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அரசுக்கு தொடர்ந்து வழக்குரைத்தல் செய்து வருகிறது அரசு நிலங்கள் கிடைத்தால் அதன் மூலம் பெண்களின் நில

உரிமையும் பாரம்பரிய விதைகள் மீதான உரிமையும் அதிகரித்து மக்களின் ஆரோக்கியமும் மேம்படும் என்பதை உறுதியாக பெண்கள் இணைப்புக்குழுவின் களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம் நம்புகிறது.

## நீர் மேலாண்மை:

சமீப காலமாக பருவ கால மாற்றத்தால் குறித்த நேரத்தில் மழை பெய்யவில்லை குறைந்த நாட்களில் அதிகமான மழை அதிக வறட்சி புயல் வெப்பம் விவசாயத்தில் பாதிப்பை உருவாக்கி வருகிறது அதை சமாளிக்க கூடிய நீர் மேலாண்மைக்கான மேட்டுப்பாத்தி மூடாக்கு முறை பல பயிர் சாகுபடி புஞ்சை பயிர் உழவில்லா பாசனம் இல்லா விவசாயம் விதைப்பந்து போடுதல் ஒற்றை நாட்டு முறை வீட்டுத்தோட்டம் மாடித்தோட்டம் மற்றும் மரம் நடுதல் முறைகளை கையாள பெண்கள் இணைப்பு குழு கற்றுக் கொடுத்து வருகிறது மேலும் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் அவசியத்தை எடுத்துரைப்பதன் மூலம் 3826 பேர் அதை பயன்படுத்தி வருகின்றனர்.

வீட்டுத் தோட்டம் மாடித்தோட்டம் நாம் அன்றாடம் பயன்படுத்தும் காய்கறிகள் கீரைகள் பழங்கள் உரங்களாலும் பூச்சிக்கொல்லி களைக் கொல்லிகளாலும் வீரிய விதைகளாலும் விஷமாக மாறி நோய்களுக்கு காரணமாக இருக்கிறது ஆதலால் விஷம் இல்லாத காய்கறிகளை கீரைகளை உற்பத்தி செய்ய பெண்களுக்கு பயிற்சி கொடுத்து வந்தது அதையே கொரோனா காலத்தில் வீட்டு தோட்டங்களை அமைக்க வீட்டிலிருந்த சிறுவர்களுக்கு விடை கொடுத்து பயிற்சி கொடுத்ததன் மூலம் வீட்டுத் தோட்டத்தை பயன்படுத்தி2539 சிறுவர்கள் வீட்டுத்தோட்டம் அமைத்து வருடத்தின் மூன்று முதல் ஐந்து மாத தேவைகளை சந்தித்து வருகின்றனர் அந்த சிறுவர்கள் இதை ஆர்வமாக செய்தவர்களுக்கு கொடுத்து ஊக்கப்படுத்தியது பெண்கள் இணைப்பு குழு

## பெண்விவசாயிகள் மாநாடு:

பெண் விவசாயிகளை விவசாய சங்கங்களை வலுப்படுத்த அவ்வப்போதைய விவசாய சூழல்களை தெளிவுபடுத்த வருடம் இரண்டு பெண் விவசாய மாநாடுகள் வட மாவட்டங்களிலும் தென் மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது விவசாயிகளுக்கு மாறிவரும் தட்பவெப்ப நிலை நில உரிமை நிலங்களும் வளங்களும் பெண்களின் வாழ்வுரிமையே பாதுகாப்பான உணவு சிறுதானியம் சிறுதானியங்களை மீட்டெடுப்போம் பாரம்பரிய விதைகளை மீட்டு எடுப்போம் வீட்டுத்தோட்டம் மாடித்தோட்டம் பேரிடர் மேலாண்மை போன்ற தலைப்புகளில் மாநாடுகள் நடத்தப்பட்டது அந்த வரிசையில் 2022 ஆம் ஆண்டு பெண்களும் விவசாய நிதிநிலை அறிக்கையும் என்ற தலைப்பில் தென்காசி மாவட்டம் குற்றாலத்திலும் திருவள்ளூர் மாவட்டம் பேரம்பாக்கத்திலும் நடைபெற்ற விவசாய மாநாட்டில் 560 பெண் விவசாயிகள் பங்கேற்றனர்

மாநாட்டில் தமிழ்நாடு அரசு முதல்முறையாக விவசாயத்திற்கு தனி நிதிநிலை அறிக்கை தயார் செய்தது பாராட்டத்தக்கது அதே நேரத்தில்

விவசாய நிதிநிலை அறிக்கை தயார் செய்யும் முன்பு விவசாய சங்கங்கள் பெண் விவசாய சங்கங்கள் இயற்கை ஆர்வலர்கள் விஞ்ஞானிகள் இவர்களையும் கலந்த ஆலோசிக்கவும் நிதிநிலை அறிக்கை பாலின நிதிநிலை அடிப்படையிலும் தயார் செய்யப்பட வேண்டும். பெண் விவசாயிகளையும் கருத்தில் கொண்டு விவசாய நிதிநிலை அறிக்கை அமைந்திருக்க வேண்டும் என்பது மாநாட்டின் பரிந்துரையாக அரசுக்கு வைக்கப்பட்டது.

## 27 வது மாநில மாநாடு:

பெண்கள் இணைப்பு குழு 27 ஆவது மாநில மாநாட்டை தர்மபுரி மாவட்டம் ஜோதி மகாலில் நடத்தியது 465 உறுப்பினர்கள் மாநாட்டில் பங்கெடுத்தனர் பெண்களும் நிதிநிலை அறிக்கையும் என்ற தலைப்பில் மாநாடு நடத்தப்பட்டது தமிழ்நாட்டில் பெண்களுக்கான கொள்கை வரைவு கொண்டு வந்திருக்கிறது அதில் பெண்கள் அமைப்புகளின் பரிந்துரைகளையும் இணைத்து உடனடியாக இறுதி வரைவை வெளியிட வேண்டும்

நிதிநிலை அறிக்கையில் பாலின நிதிநிலை அறிக்கையையும் கவனத்தில் எடுத்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் பொது வேலைகளை செய்து அதை பெண்கள் நிதியில் சேர்க்கக்கூடாது

பெண்களின் பாலியல் நிதிநிலை அறிக்கையை வெளிப்படையாக டிஜிட்டல் பேனரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் வைக்க வேண்டும் இந்த நிதி சரியாக செலவிடப்படுகிறதா என்பதை கண்காணிக்க கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும் என்ற கருத்துக்கள் பெண்கள் இணைப்பு குழு மாநில தலைவி திருமதி சீலு அவர்களால் வலியுறுத்தி பேசப்பட்டது. மாநாட்டிற்கு தமிழ்நாட்டின் மகளிர் ஆணைய தலைவி திருமதி குமரி அவர்கள் வந்திருந்து பெண்கள் குழந்தைகளின் நிலை பற்றி மாவட்ட வாரியாக கணக்கெடுத்து தமிழக முதல்வரிடம் சமர்ப்பிக்க உள்ளது குழந்தைகள் அனைவரும் மன அழுத்தத்தில் இருக்கிறார்கள் என்ற கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.



■ திருவண்ணாமலை அடுத்த சோ பள்ளம் கிராமத்தில் ... பு குழுவின் களஞ்சியம் பெண் ... ந்த விதை திருவிழாவில் மாவட்ட ... சினார்.

திருவண்ணாமலை அருகே

# பெண்கள் இணைப்பு குழு சார்பில் உணவு திருவிழா

**சிறுதானியத்தில் சிறப்பாக உணவு தயார் செய்தவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது**

**திருவண்ணாமலை, நவ.3–**

திருவண்ணாமலை அருகே பெண்கள் இணைப்பு குழு சார்பில் உணவு திருவிழாவில் தானியத்தில் சிறப்பாக உணவு தயார் செய்தவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம் சோமாசிபாடி அடுத்த சோ பள்ளம் கிராமத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்க சார்பாக உலக உணவு தினத்தை அனுசரித்து உணவு மற்றும் விதை திருவிழா நடைபெற்றது.

விழாவுக்கு திருவண்ணாமலை மாவட்ட பெண்கள் இணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர் சுமதி ... ராதா, விஜயா, ஜெயா, லட்சுமி, சுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இயற்கை விவசாயி கலசப்பாக்கம் ராஜேந்திரன் லெனின், பெண்கள் இணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர் பவானி ஜோஸ்பின் ராஜா ஆகியோர் பேசினர்.

உணவு திருவிழாவில் சிறப்பு விருந்தினராக அரசு கலைக்கல்லூரி ஆங்கில பேராசிரியர் அறிவிச்செல்வி, தொடு சிகிச்சை மற்றும் சீடு தெரபி மருத்துவர் டாக்டர் சாந்தா தேவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் சிறுதானியத்தில் சிறப்பாக உணவு செய்து கொண்டு வந்தவர்களை தேர்வு செய்து பரிசுகள் வழங்கப்பட்டது இதில் ...

திருவ
ஊராட்சி
உட்பட்ட
ஊராட்சியி
12 வார்டு
உள்ளனர்.
துணைத்
பாலாமூ
செயல்பட்
இந்த
வேங்கிக்க
சிறப்பு
நடத்தப்ப

# செ

திருவண்
திருவ
அருகேவிவ
வாங்கிக்
கொடுக்க
லட்சம்
பேர் மீது
செய்யப்ப
திருவ
மாவட்டம்
மண்மலை
சேர்ந்தவ
விவசாயி.
தொழில்
இந்த நில
16.10.2021
என்பவர் அ
தனக்கு 35
வேண்டும்
பின்னர்
செம்மறி
லட்சத்து
விலை
அதற்கு மு
ஆயிரத்தை
சங்கர்
மீதித்தொ
லட்சத்து
யூனியன்



கோட்டையானது பராமரிப்பின்றி நாளடைவில் அழிந்து 700க்கும் மேற்பட்ட குடியிருப்புகளாக மாறி உள்ளது.

இப்பகுதி மக்கள் பலமுறை அரசிடம் வீட்டுமனை பட்டா கேட்டும் இதுவரை கிடைக்கவில்லை. ஒரு சிலர் மட்டும் பட்டா வைத்துள்ளனர். தற்போது இந்த கோட்டைக்குள் 4 செண்டு பரப்பளவில் மசூதி உள்ளது. இந்த மசூதியை யாராவது ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தால் இறந்து செய்து வருகின்றனர்.

இக்கோட்டையை சுற்றி சேத்துப்பட்டு டவுன் பெருஞ் சில் 10, 11, 12, 1 17, 18 வார்டுகள் இந்த அகழியில் தேங்குவதால் நி பாதுகாக்கப்படுகிறது. உபரி நீர் அருகில் உள்ள ஏரிக்கு செல்கிறது. எனவே கோட்டை ஆக்கிரமிப்பிற்கு இப்பகுதியில் உள்ள ஒரு பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவாய்த்துறை, கிராம நிர்வாக அலுவலர் முதல், பஞ்சாயத்தில் இரு தரப்பினரும் மாவட்ட கலெக்டர் மனு கொடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுத்து சையத் கான் கோட்டை மற்றும் அகவழி ஆக்கிரமிப்புகளை அகற்றி பாதுகாக்க வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.




■ கலசபாக்கம் வாரச்சந்தை அருகே மரபணு கடுகுக்கு எதிர்ப்பு தெரிவித்து இயற்கை விவசாயிகள் ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் இயற்கை விவசாயி ராஜேந்தின், மூத்த இயற்கை விவசாயி மீனாட்சி சுந்தம்,களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் சுமதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கலசபாக்கம் வாரச்சந்தை அருகே

# மரபணு கடுகுக்கு எதிர்ப்பு தெரிவித்து இயற்கை விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

**திருவண்ணாமலை, நவ.7-** கலசபாக்கம்வாரச்சந்தை அருகே மரபணு கடுகுக்கு எதிர்ப்பு தெரிவித்து இயற்கை விவசாயிகள் ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கலசப்பாக்கம் அரசு உயிர்நிலை பள்ளி எதிரில் வழக்கம் போல் இயற்கை விவசாயிகளின் வார சாந்தை நடைப்பெற்றது. இதில் கலசப்பாக்கம் பாரம்பரிய விதைகள் மையம் இயற்கை விவசாயி ராஜேந்தின் தலைமையில், மூத்த இயற்கை விவசாயி மீனாட்சி சுந்தம் அவர்கள் முன்னிலையில் இயற்கை விவசாயிகள் ஆர்ப்பாடத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் இணைப்புக் குழுவின் களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் சுமதி, பாவானி, ஜோன்பின் ராஜா,பாரம்பரிய விதைகள் மைய செயலாளர் இயற்கை விவசாயி லெனின் 50-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இதில் விதை உரிமையைக் காக்க மரபணு மாற்று விதையை அனுமதியோம். நஞ்சில்லா உணவுக்காக மரபணு கடுகை அனுமதிக்க மாட்டோம். பாரம் விதைகளை காப்போம் விதை உரிமையை காப்போம். மத்திய அரசு கடுகு மரபணு சோதனையை கைவிட வேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## உலக திருக்குறள் கூட்டமைப்பு தொடக்கம்



■ செங்கம் நகரில் உலக திருக்குறள் கூட்டமைப்பு தொடக்க விழா, மணலூர்பேட்டை அரிமா சம்பத் தலைமையில் நடைபெற்றது, தலைவராக பா ஜெயவேலு, செயலாளராக முனைவர் மணிமாறன், பொருளாளராக மருத்துவர் ஸ்ரீதர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கல்வியாளர் மாணிக்கம், ஆன்மீக சொற்பொழிவாளர் தனஞ்செயன், ஆசிரியர் பொன் லோகானந்தம் செயற்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

மதுரை மலர்
வாரஇதழ்
2022 நவம்பர் 06




## பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு நீதி கேட்டு கண்டன ஆர்ப்பாட்டம்

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள திருவள்ளுவர் சிலை முன்பு, மதுரை மாவட்ட பெண்கள் கூட்டமைப்பு சார்பில் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பெண் புகாரைப் பதிவு செய்யாமல் அலைக்கழித்த சத்திரப்பட்டி, நத்தம் காவல் நிலைய அதிகாரிகள் மீதும் சாணார்பட்டி மகளிர் காவல் நிலைய அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க கோரி தமிழ்நாடு பெண்கள் இயக்கத்தின் மாநில தலைவர் தொ.ஆரோக்கியமேரி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




நத்தம் விளாம்பட்டியைச் சேர்ந்த பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த
குற்ற



↑ வேலூரில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் சிறுதானிய சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.

# வேலூரில் சிறுதானிய சமத்துவ பொங்கல் விழா

**● வேலூர்**

வேலூரில் தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு சார்பில் சிறுதானிய சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.

வேலூரில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் சர்வதேச சிறுதானிய ஆண்டு-2023 வெள்ளோட்டம் மற்றும் சமத்துவ பொங்கல் விழா நேற்று நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லோகநாயகி வரவற்றார். ராணிப்பேட்டை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மேரி அமைப்பின் நோக்கம் குறித்து பேசினார். வேலூர் திட்ட மேலாளர் பேட்ரிக் வாழ்த்தி பேசினார். சிறுதானிய ஆண்டு வெள்ளோட்டம் குறித்து வேலூர் உதவி தோட்டக்கலை அலுவலர் டென்னிசன் பிரபு பேசினார்.

அமைப்பின் இயக்குநர் ஜேம்ஸ் இயற்கை வேளாண்மை குறித்து பேசினார். வாலாஜா வட்ட ஒருங்கிணைப்பாளர் மஞ்சுளா எதிர்கால திட்டம் குறித்து பேசினார். இதன் தொடர்ச்சியாக. சிறுதானிய சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியின் முடிவில் வேலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நான்சி நன்றி தெரிவித்தார்.

அப்போது, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முரளி, வட்டாட்சியர் சுரேஷ், விடுதி காப்பாளர் அன்பரசு மற்றும் வருவாய்த் துறையினர் உட்பட பலர் பங்கேற்றனர்.



↑ தி.மலை அடுத்த வேங்கிக்காலில் பெண்கள் இணைப்பு குழு சார்பில் சிறுதானிய பொங்கல் விழா நடைபெற்றது.

## தி.மலையில் சிறுதானிய பொங்கல் விழா

● திருவண்ணாமலை

சர்வதேச சிறுதானிய ஆண்டை முன்னிட்டு தி.மலை பெண்கள் இணைப்பு குழு சார்பில் சிறுதானிய பொங்கல் விழா திருவண்ணாமலை அடுத்த வேங்கிக்கால் ஊராட்சியில் நேற்று நடைபெற்றது.

வேங்கிக்கால் மாரியம்மன் கோயில் வளாகத்தில் சிறுதானிய பொங்கலிட்டு பெண்கள் கொண்டாடினர். ஒருங்கிணைப்பாளர் எஸ்.சுமதி கூறும்போது, "பெண்கள் இணைப்பு குழுவின் ஒரு அங்கமாக செயல்படும் களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம் சார்பில் கால நிலை மாற்றத்தை தாங்கி வளரக்கூடிய சிறுதானியங்களை பயிர் செய்வதை ஊக்கப்படுத்தி வருகிறது.

பாரம்பரிய சத்தான சிறு தானியங்களை மீட்டெடுக்க, அகில இந்திய சிறுதானிய சகோதரிகள் அமைப்புடன் இணைந்து செயல்படுகிறோம். சிறுதானியங்களை அன்றாட உணவில் சேர்க்கவும், நியாய விலை கடைகள் மற்றும் உணவு வழங்கும் திட்டங்களில் சிறுதானியங்களை வழங்க வேண்டும். சிறுதானிய உற்பத்தி செய்யும் பெண் விவசாயிகள் மற்றும் கூட்டு விவசாய குழுக்களுக்கு தரிசு நிலங்களை நீண்ட கால குத்தகைக்கு தமிழக அரசு வழங்க வேண்டும். சிறுதானிய விதை திருவிழாக்கள் மற்றும் சத்தான உணவு திருவிழாவை பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தி வருகிறோம்" என்றார்.



# ரேஷன் கடையில் சிறுதானியம் வினியோகிக்க வேண்டுகோள்

**திருவள்ளூர், ஜன. 15–**

திருவள்ளூர் அடுத்த, தொட்டிக்கலை வட்டார பெண்கள் இணைப்புக் குழு சார்பில், சிறு தானியப் பொங்கல் விழா, பாண்டூர் ஊராட்சி கனகவல்லிபுரத்தில் நடந்தது.

பெண்கள் இணைப்புக் குழு தலைவர் சகாயமேரி தலைமை வகித்து பேசுகையில், உடல் ஆரோக்கியத்தைப் பேண சிறுதானிய உணவு வகையை அதிகளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ரேஷன் கடைகளில் சிறுதானியங்களை வழங்க வேண்டும். சிறுதானியம் விளைவிக்கும் விவசாயிகளுக்கு அரசு சலுகை வழங்க வேண்டும் என்றார்.

பின், சிறுதானியத்தில் பொங்கல் வைத்து, பங்கேற்றவர்களுக்கு வழங்கப் பட்டது. கூட்டத்தில், ஊராட்சி தலைவர் பிரபு, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க செயலர் வில்சன் மற்றும் பொதுமக்கள், மாணவ – மாணவியர் பங்கேற்றனர்.

ரானதுரைமுருகன்கண்டுபி டையே சூத்திரதாரி துரைமு இருந்து வெளியேறினார்.

## தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் சார்பில்

# பெரியகுளத்தில் பெண்களை ஒன்றிணைத்து சிறுதானிய பொங்கல் திருவிழா!



தேனி, ஜன. 11

தேனி மாவட்டம், பெரியகுளத்தில், தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் சார்பில், சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023ஐ முன்னிட்டு அன்று பெரியகுளம், வடகரை, கல்லார் ரோடு பகுதியில் சிறுதானிய பொங்கல் வைக்கும் விழா நடைபெற்றது

அந்தப் பகுதியில் உள்ள மகளிர்களைஒன்றிணைத்து சிறுதானிய பொங்கல் இட்டு பொதுமக்களுக்கு வழங்கி சிறுதானியத்தின் மகத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எடுத்துரைத்தனர்

மேலும் பத்திரிக்கையாளர் சந்திப்பின்போது தேனி திண்டுக்கல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சித்ராதேவி கூறுகையில்

கடந்த 20 ஆண்டுகளாக தமிழகத்தில் உள்ள 21 மாவட்டங்களின் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு எழுவின்களஞ்சியம்பெண் விவசாயிகள்சங்கம்இயங்கி வருகிறது

இதில்த மிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு, தமிழகத்தில் 28 வருடங்களாக 21 மாவட்டங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், முதியோர், ஆண்கள் மற்றும் பெண் விவசாயிகளை ஒருங்கிணைத்து சமூக கலாச்சார, பொருளாதார, அரசியல், பாலியல், சுற்றுச்சூழல் மற்றும் உணவு உத்தரவாத ரீதியாக பலப்படுத்தும் பணியை செய்து வருகிறது. பெண்கள் இணைப்பு குழுவின் ஒரு அங்கமாக களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம் காலநிலை மாற்றத்தை தாங்கி வளரக்கூடிய சிறுதானியகள் பயிர் செய்வதை ஊக்கப்படுத்தி வருகிறது. பாரம்பரிய சத்தான சிறு தானியங்களை மீட்டெடுக்க இந்திய சிறுதானிய கூட்டமைப்பு மற்றும் அகில இந்திய சிறுதானிய சகோதரிகள் அமைப்போடு பெண்கள் இணைப்பு குழுவும் இணைந்து செயல்பட்டு வருகின்றது

கடந்த 10 ஆண்டுகளாக சத்தான சிறுதானியங்கள் உற்பத்தி செய்யவும் அன்றாட உணவில் சிறுதானியங்களை சேர்த்துக் கொள்ளவும், அரசின் நியாய விலை கடைகளிலும், அனைத்து உணவு வழங்கும் திட்டங்களில் சிறுதானியங்களை வழங்க வேண்டும் என்றும், பஞ்சாயத்துக்குட்பட்டதரிசுநிலங்களை சிறுதானிய உற்பத்தி செய்யும் பெண் விவசாயிகள் மற்றும் கூட்டு விவசாய குழுக்களுக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்க வேண்டியும் தொடர்ந்து தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்து வருகின்றோம் பாரம்பரிய விதைகளைமீட்டெடுக்கும் பொருட்டு சிறுதானிய விதை திருவிழாக்கள், சத்தான உணவு உத்தரவாதத்திற்கான உணவு திருவிழாக்கள் போன்ற பிரச்சார வழிகளை பயன்படுத்தி கிராமங்களிலும், பள்ளி கல்லூரிகளிலும் தொடர்ந்து விழிப்புணர்வு கொடுத்து வருகிறோம். இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் 2023 ஜனவரி பத்தாம் தேதி சர்வதேச சிறுதானிய ஆண்டு 20203 ஐ முன்னிட்டு இன்று ஓராண்டு பிரச்சாரத்தைநாங்கள் முன்னெடுத்து உள்ளோம் அதன் அடிப்படையில் பெண்கள் இணைப்பு குழுதமிழகத்தில்21 மாவட்டங்களில் "சிறுதானிய பொங்கல்" வைத்து சிறுதானியத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி வருகின்றோம் அதன் ஒரு பகுதியாக இன்று பெரியகுளத்தில்சிறுதானிய பொங்கலிட்டு பொதுமக்கள்மத்தியில்விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளதாக கூறினார்

மேலும் இயற்கை முறையில்இரும்பு மஞ்சள் கிழங்கு விறகு அடுப்பு வைத்து மண் பானையில் தமிழர்களின் பாரம்பரிய கலரசாரத்தை எடுத்துரைக்கு வண்ணம் இயற்கையான முறையில் சிறுதானியங்களில் பொங்கலிட்டு பொதுமக்களுக்கு வழங்கியது பொதுமக்கள் மத்தியில் அமோக வரவேற்பு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மையை எரிக்க முயன்றார். பரப்பை ஏற்படுத்தியது.

## உசிலம்பட்டி அருகே

# சிறுதானிய பொங்கல் விழா!



உசிலம்பட்டி, ஜன.12

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் செல்லம்பட்டியில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில்சிறுதானியங்களை உற்பத்தி செய்யவும், சிறுதானியங்களை உணவுகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சிறுதானிய பொங்கல் விழா நடத்தப்பட்டது.

செல்லம்பட்டி அலுவலகத்தில் நடந்த பொங்கல் விழாவில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மாநிலத் துணைச் செயலாளர் கே.ஜோதி தலைமையில் கிளப்பச்சேரி பெண் விவசாயிகள் சங்கம் செல்லம்மாள், பூபதி,

முன்னிலையில் மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ் .காமேஸ்வரி உசிலம்பட்டி சேடபட்டி வட்டார பெண்கள் இணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர் உத்தப்புரம் காளியம்மாள் களப்பணியாளர்கள் தங்கச்செல்வி, லிங்கத்தாய் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர்.

# ராஜபாளையத்தில்

பெரியகுளத்தில்

## தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் சிறுதானிய பொங்கல் திருவிழா!



# பெரியகுளத்தில் சிறுதானிய பொங்கல் விழா

பெரியகுளம், ஜன. 17: பெரியகுளத்தில் சிறுதானிய பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபை 2023 ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவித்ததை தொடர்ந்து தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரை பேரூராட்சி முத்துவேல் நகர் பகுதியில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் சிறுதானிய பொங்கல் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில், சிறுதானியங்களால் வண்ண கோலம் இட்டு சிறுதானியங்களை வைத்து பொங்கல் வைத்து அனைத்து சமூக மக்களும் இணைந்து ஒற்றுமை விழாவாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு பெண்கள் இணைப்புகுழு ஒருங்கிணைப்பாளர் சித்ரா தேவி தலைமை வகித்தார். தென்கரை பேரூராட்சி தலைவர் நாகராஜ், 1வது வார்டு உறுப்பினர் குமரேசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறுதானியங்களின் உற்பத்தி, பயன்பாடு, தேவைகள் குறித்து விளக்கி பேசினார்கள். நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு சிறுதானிய பொங்கல் வழங்கப்பட்டது. தமிழ் நாடு பெண்கள் இணைப்பு குழு நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்கள் இளைஞர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பெரியகுளத்தில் சிறுதானிய பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.



பெரியகுளத்தில்

# சிறுதானிய விழிப்புணர்வு பொங்கல் விழா

பெரியகுளம், ஜன. 11: பெரியகுளத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் சார்பில் பெண்களை ஒன்றிணைத்து சிறுதானிய பொங்கல் திருவிழா நடைபெற்றது. பெரியகுளம், வடகரை, கல்லார் ரோடு பகுதியில் நடந்த விழாவில் அப்பகுதி பெண்களை ஒன்றிணைத்து சிறுதானிய பொங்கல் இட்டு பொதுமக்களுக்கு வழங்கி சிறுதானியத்தின் மகத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எடுத்துரைத்தனர்.

தேனி, திண்டுக்கல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சித்ராதேவி கூறுகையில், "பாரம்பரிய சத்தான சிறு தானியங்களை மீட்டெடுக்க இந்திய சிறுதானிய கூட்டமைப்பு மற்றும் அகில இந்திய சிறுதானிய சகோதரிகள் அமைப்போடு பெண்கள் இணைப்பு குழுவும் இணைந்து செயல்பட்டு வருகின்றது. கடந்த 10 ஆண்டுகளாக சத்தான சிறுதானியங்கள் உற்பத்தி செய்யவும் அன்றாட உணவில் சிறுதானியங்களை சேர்த்துக்கொள்ளவும், அரசின் நியாய விலை கடைகளிலும், அனைத்து உணவு வழங்கும் திட்டங்களில் சிறுதானியங்களை வழங்க வேண்டும் என்றும், பஞ்சாயத்துக்குட்பட்ட தரிசு நிலங்களை சிறுதானிய உற்பத்தி செய்யும் பெண் விவசாயிகள் மற்றும் கூட்டு விவசாய குழுக்களுக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்க வேண்டியும் தொடர்ந்து தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்து வருகின்றோம். பாரம்பரிய விதைகளை மீட்டெடுக்கும் பொருட்டு சிறுதானிய விதை திருவிழாக்கள், சத்தான உணவு உத்தரவாதத்திற்கான உணவு திருவிழாக்கள் போன்ற பிரச்சார வழிகளை பயன்படுத்தி கிராமங்களிலும், பள்ளி, கல்லூரிகளிலும் தொடர்ந்து விழிப்புணர்வு கொடுத்து வருகிறோம்" என்றார்.



பெரியகுளத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் சார்பில் பெண்களை ஒன்றிணைத்து சிறுதானிய பொங்கல் திருவிழா நடைபெற்றது.

## சர்வதேச ஆண்டாக அறிவிப்பு எதிரொலி

# சிறு தானிய பொங்கல் விழா



▶ சர்வதேச சிறுதானிய ஆண்டையொட்டி தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

**தர்மபுரி, ஜன.11:** சர்வதேச சிறு தானிய ஆண்டாக அறிவிப்பு எதிரொலியாக தர்மபுரியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறு தானிய பொங்கல் திருவிழா நடந்தது.

இந்திய அரசின் வேண்டுகோளை ஏற்று, ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, 2023ம் ஆண்டை சர்வதேச சிறு தானியங்கள் ஆண்டாக அறிவித்துள்ளது. சிறு தானியங்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மக்களிடையே மக்காச் சோளம் தவிர்த்து, இதர சிறுதானியங்கள் உற்பத்தியை உயர்த்தவும், பயன்பாட்டினை அதிகரிக்கவும் பல்வேறு வகையான விளம்பரப் பணிகளை அரசு செய்து வருகிறது. தற்போது பொது மக்களிடையே அரிசி உணவு அதிகரித்து, சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, குதிரை வாலி போன்ற சிறு தானியங்கள் பயன்பாடு வெகுவாகக் குறைந்து விட்டதால், சாகுபடி பரப்பும் குறைந்துள்ளது. இந்நிலையில் சிறுதானிய சாகுபடி பரப்பு அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில் சர்வதேச சிறுதானிய ஆண்டை முன்னிட்டு இந்திய சிறுதானிய கூட்டமைப்பு, அகில இந்திய சிறுதானிய சகோதரிகள், தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் சிறுதானிய பொங்கல் திருவிழா நேற்று நடந்தது. குதிரைவாலி, சாமை, தினை உள்ளிட்ட சிறுதானியத்தில் பொங்கல் வைத்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இனிப்புக்கு நாட்டு சர்க்கரை பயன்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரெங்கநாயகி மற்றும் கள பணியாளர்கள் ராணி, உமா. விஜியலட்சுமி மற்றும் தொண்டுநிறுவன பிரதிநிதிகள் சீட்ஸ் சரவணன், விஐபி சரளா செந்தில் குமார், ரியல் பவுண்டேசன் இயக்குநர் செந்தில் ராஜா, விலங்குகள் நல ஆர்வலர் ராஜலிங்கம், எபிரோன் பயற்சி இயக்குநர் சைன் தாமஸ், காந்தி சேவாலயம் வாசகர் மற்றும் மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

BREAKING NEWS

# தேனி மாவட்ட செய்திகள்

தினதபால் வார இதழ் DHINA THABHAL Weekly

## பெரியகுளத்தில் தமிழ் நாடு பெண்கள் இணைப்புக் குழு சார்பாக சமத்துவ பொங்கல் விழா



பெரியகுளத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் சார்பில் சிறுதானியங்களால் காளை மாடு கோலமிட்டு . இயற்கைக்கு படைத்து சமத்துவ பொங்கல் திருவிழா நடைபெற்றது ஏராளமான சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் பங்கேற்பு

தேனி மாவட்டம், பெரியகுளத்தில், தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு தேனி திண்டுக்கல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர் சித்ரா தேவி தலைமையில் இந்திய சிறுதானிய கூட்டமைப்பு மற்றும் இந்திய சிறுதானிய சகோதரிகள் சார்பில்,
சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023 ஐ முன்னிட்டு இன்று பெரியகுளம், தென்கரை பேரூராட்சிக்கு உட்பட்ட முத்துவேல் நகர் குதியில் சிறுதானிய காளை மாடு கோலமிட்டு சிறுதானியத்தால் பொங்கல் வைக்கும் விழா நடைபெற்றது
இதில் அந்தப் பகுதியில் உள்ள கிறிஸ்தவர்கள் இஸ்லாமிய மற்றும் இந்து மகளிர்களை ஒன்றிணைத்து சிறுதானிய பொங்கல் இட்டு பொதுமக்களுக்கு வழங்கி சிறுதானியத்தின் மகத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும் ஒருங்கிணைப்பாளர் ஆர். சித்ராதேவி
கூறுகையில் அரசு சிறுதானியத்தின் மகத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் அரசு நியாய விலை கடைகளில் சிறுதானியத்தை பொதுமக்களுக்கு வழங்கிட வேண்டும் அனைத்து உணவு திட்டங்களிலும் சிறுதானியத்தை இடம்பெற செய்திட வேண்டும் எனக் கூறினார் மேலும் சிறுதானியம் குறித்து பள்ளி கல்லூரி கிராமங்கள் பொதுமக்கள் என அனைவரிடமும் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்திய வருவதாகவும் ஓராண்டு பிரச்சாரமாக எடுத்து வருவதாக கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக
பெரியகுளம் தென்கரை பேரூராட்சி தலைவர் நாகராஜ்,
வார்டு உறுப்பினர் குமரேசன், திமுக நிர்வாகி மாரியம்மாள் ,
தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவைச் சேர்ந்த பத்மாவதி உறுப்பினர்கள் குமாரி,ஆரோக்கிய மேரி, கிரேசா, சபரி ஆரோக்கியா மேரி உள்ளிட்டோர் சிறுவர்கள் சிறுமிகள் தாய்மார்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு அனைவருக்கும் சிறுதானிய பொங்கலை வழங்கி சமத்துவ பொங்கல் கொண்டாடினர் முன்னதாக சிறுதானியம் குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்

மேலும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் சிறு தானியங்களை வைத்து இன்று மாட்டுப் பொங்கலை முன்னிட்டு காளை மாட்டின் படத்தை கோலமிட்டு இயற்கைக்கு படைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தியது அனைவரையும் கவரும் வண்ணம் இருந்தது

16-1-23

என்பது உள்பட பல்வேறு



ஊட்டி, கோத்தகிரியில்

# சிறுதானிய பயன்பாடு விழிப்புணர்வு நிகழ்ச்சி

கோத்தகிரி, ஜன.11–

ஊட்டி அரசு கலைக்கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் சார்பில், சர்வதேச சிறுதானிய ஆண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஷீஜா வரவேற்றார். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) எபநேசர் தலைமை தாங்கினார். சிறுதானியங்களின் பயன்பாடு மற்றும் நன்மைகள் குறித்து தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) ஷிப்லா மேரி விளக்கினார். இதில் நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் 300 பேர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் சரவணன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

சர்வதேச சிறுதானிய ஆண்டையொட்டி தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில், கோத்தகிரியில் சிறுதானிய பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பிரசாரம் நடைபெற்றது. இதில் நீலகிரி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சாராள் தலைமை தாங்கி பேசும்போது, காலநிலை மாற்றத்தை தாண்டி வளரக்கூடிய சிறுதானியங்கள் பயிரிட ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது. பாரம்பரிய விதைகளை மீட்டெடுக்கும் பொருட்டு சிறுதானிய திருவிழாக்கள், சத்தான உணவு, உத்தரவாதத்திற்கான உணவு திருவிழாக்கள் போன்ற பிரசாரம் மூலம் பயன்படுத்தி கிராமங்கள், பள்ளி, கல்லூரிகளில் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்றார். தொடர்ந்து கலந்துகொண்ட பெண்கள் அனைவரும் சிறுதானிய பொங்கல் செய்து கொண்டாடி மகிழ்ந்தனர்.

79 04 47 97 71

[redacted]

11.01.2023

# ஒழலூர் ஊராட்சியில் நடைப்பெற்ற சர்வதேச சிறுதானிய ஆண்டு பொங்கல் விழா



செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஒழலூர் ஊராட்சியில் சர்வதேச சிறுதானிய ஆண்டு விழா தினம் கொண்டாடப்பட்டது.களஞ்சியம் பெண்கள் விவசாயிகள் குழு சார்பில் ஏற்பாடு.ஒழலூர் ஊராட்சி மன்ற தலைவர் பிரபாகரன் தலைமையில் நடைப்பெற்ற ச சிறுதானிய பொங்கல் விழாவில் சுற்றுச்சூழல் கால நிலைமாற்றத்தை தாங்கி வளரக்கூடிய சிறுதானிய பயிர்கள் செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும்.சிறுதானிய உணவுகளின் பயன்பாடு மற்றும் சிறுதானிய உணவுகளால் உடலுக்கு ஏற்படும் நன்மை குறித்தும் கும்மியடித்து,நாட்டுப்புற பாடல்கள் பாடியும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.அதனை தொடர்ந்து பாரம்பரிய சிறுதானிய பொங்கல்யிட்டு பொதுமக்களுக்கு வழங்கினர். செங்கல்பட்டு மாவட்டத்தில் முதன்முறையாக ஒழலூர் ஊராட்சியில் கொண்டாப்பட்ட சர்வதேச சிறுதானிய ஆண்டு பொங்கல் விழாவில் கிராமத்தை சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துக்கொண்டு சிறுதானிய பொங்கல்யிட்டு மகிழ்ந்தனர்



திட்டக்குடி ஜனவரி 11; கடலூர் மாவட்டம் தொழுதூர் அடுத்த ஆவட்டி கிராமத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ கணேசன் அவர்களால் வருவாய் ஆய்வாளர் கட்டிடம் புதியதாக திறந்து வைக்கப்பட்டது. திறந்து வைக்கப்பட்ட நாளில் இருந்து இன்று வரை அலுவலகத்தை திறக்கவில்லை என்று கூறி கிராம மக்கள் இருபதுக்கும் மேற்பட்டோர் வருவாய் ஆய்வாளர் புஷ்பராஜை கண்டித்து வருவாய் ஆய்வாளர் கட்டிடம் முன்பு அமர்ந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக தர்ணாவில் ஈடுபட்டனர் தகவல் அறிந்த சம்ப இடத்திற்கு வந்த ராமநத்தம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தியதில் உடன்பாடு ஏற்பட்டு கலைந்து சென்றனர். தகவல் அறிந்த கிராம மக்கள் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் முன்பு நூற்றுக்கும் மேற்பட்டோர் குவிந்து வந்ததால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது

# இலங்கை தமிழர்கள் தைப்பொங்கல் திருநாளினை மகிழ்ச்சியுடன் சிறப்பாக கொண்டாடும் வகையில் பொங்கல் பரிசு தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் கி.பாலசுப்ரமணியம் பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்து



அகதிகள் ஆகிய 774027 குடும்ப அட்டைகளுக்கு இன்று முதல் வழங்கப்படவுள்ளது. கடந்த 03.01.2023 முதல் 08.01.2023 முடிய ஒவ்வொரு நியாய விலைக் கடை பணியாளர்களும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட குடும்ப மூலமும், இதற்கான உரியபதிவுகள் ஒப்புதல் படிவத்தில் பதிவேத்தாளில் குறிப்பிடப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்திட விநியோக அட்டவணை விவரத்தை காவல் துறைக்கு முன்கூட்டியே தெரிவித்து 975 குடும்ப அட்டைகளுக்கு மேல்



↑ வேலூரில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் சிறுதானிய சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.

# வேலூரில் சிறுதானிய சமத்துவ பொங்கல் விழா

● **வேலூர்**

வேலூரில் தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு சார்பில் சிறுதானிய சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.

வேலூரில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் சர்வதேச சிறுதானிய ஆண்டு-2023 வெள்ளோட்டம் மற்றும் சமத்துவ பொங்கல் விழா நேற்று நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லோகநாயகி வரவேற்றார். ராணிப்பேட்டை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மேரி அமைப்பின் நோக்கம் குறித்து பேசினார். வேலூர் திட்ட மேலாளர் பேட்ரிக் வாழ்த்தி பேசினார். சிறுதானிய ஆண்டு வெள்ளோட்டம் குறித்து வேலூர் உதவி தோட்டக்கலை அலுவலர் டென்னிசன் பிரபு பேசினார்.

அமைப்பின் இயக்குநர் ஜேம்ஸ் இயற்கை வேளாண்மை குறித்து பேசினார். வாலாஜா வட்ட ஒருங்கிணைப்பாளர் மஞ்சுளா எதிர்கால திட்டம் குறித்து பேசினார். இதன் தொடர்ச்சியாக. சிறுதானிய சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியின் முடிவில் வேலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நான்சி நன்றி தெரிவித்தார்.

9:21 PM | 0.0KB/s

Select text



# குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிற்றுண்டியிலும் சிறுதானியத்தை சேருங்க!

**பெண் விவசாயிகள் கோரிக்கை!**



தமிழகம் முழுவதும் நியாய விலைக்கடைகளில் தமிழக அரசு சிறுதானியங்களை விநியோகிக்கவும் மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை சிற்றுண்டியில் சிறுதானியத்தை சேர்க்க பெண் விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேலூரில் களஞ்சியம் பெண்கள் விவசாயிகள் சங்கத்தின் சார்பில் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

இதில் மஞ்சுளா மேரி.லோக நாயகி, நான்சி ஆகிய பெண் விவசாய சங்க நிர்வாகிகள் கூட்டாக செய்தியாளர்களிடம் கூறுகையில் பெண் விவசாயிகள் சங்கம் தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப்பட்டு சிறப்பாக செயல்படுகிறது.

இதில் சிறுதானியங்களான தினை, கேழ்வரகு, பனிவரகு, சாமை குதிரைவாலி, வரகு, கம்பு, சோளம் உள்ளிட்ட சிறுதானியங்களை அதிக அளவில் பெண் விவசாயிகள் நாங்கள் ஒருங்கிணைந்து பாரம்பரிய விவசாய முறைகளை கடைபிடித்து இதனை நாங்கள் உற்பத்தி செய்கிறோம்.

தமிழ்நாட்டில் தற்போது சிறுதானிய உற்பத்தியை அதிக அளவு செய்து வருவதால் பொதுமக்களும் பாரம்பரிய முறைக்கு மாறி வருகிறார்கள்.

இந்த பாரம்பரிய உணவை சாப்பிடுவதால் நோய்கள் ஏற்படாது நல்ல உடல் வலிமை ஏற்படும் வாரத்திற்கு 10 வேளை யாவது சிறுதானிய உணவை உட்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் முழுமையாக செயல்பட்டு வருகிறோம்.

தமிழகத்தில் நியாயவிலைக் கடைகள் மூலம் சிறுதானியங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் குழந்தைகளுக்கு வழங்கப்படும் காலை சிற்றுண்டியிலும் சிறுதானியத்தை சேர்க்க வேண்டும் மேலும் சத்துணவு மாணவர் விடுதிகள் மருத்துவமனைகள் அம்மா உணவகங்கள் சிறைசாலைகள் போன்ற இடங்களில் அரசு உணவு வழங்குவதில் சிறுதானியங்களை சேர்க்க வேண்டும் சிறுதானியம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அரசு ஊக்கத்தொகை வழங்கவும் உற்பத்தியாகும் சிறுதானியங்களை அரசே கொள்முதல் செய்ய முன் வரவேண்டும் கிராம அளவில் உள்ள பஞ்சாயத்துக்களில் தானிய கிடங்குகள் அமைத்து விவசாய பொருட்களை அங்கேயே சேமித்து பராமரித்து பாதுகாப்பாக விநியோகம் செய்ய வேண்டும் இதன் மூலம் சத்தாண கிராம பகுதி மக்களுக்கு கிடைக்கும் என்று கூறினார்கள்.

---

வேலூர் மாவட்டத்தில் முதல்முறையாக

# காவல் செய்தி மடல்-1 வெளியீடு

காவலர்களின் சிறப்பு செய்திகள் குறித்து காவல் செய்தி மடல் (மாதம்/ காலாண்டு) சென்னை, ஆவடி, தாம்பரம் போன்ற பெருநகர காவல் ஆணையரங்களில் மட்டும் வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வேலூர் மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய காவலர்களின் நற்செயல்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு மாவட்டத்தில் முதல்முறையாக வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் முயற்சியினால் கடந்த ஆண்டு அக்டோபர்-22 முதல் டிசம்பர்-22 வரை காவலர்களின் சிறப்புகள் குறித்து காவல் செய்தி மடல்-I தயாரிக்கப்பட்டு கடந்த 13.01.2023-ம் தேதி சமத்துவ பொங்கல் விழாவின்போது வேலூர் சரக காவல்துறை துணைத் தலைவர் முனைவர் M.S.முத்துசாமி மற்றும் வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S.ராஜேஸ் கண்ணன் தலைமையில் வெளியிடப்பட்டது.

நம் தினமதி

ஜனவரி 14 2023
சனிக்கிழமை

# கலசப்பாக்கத்தில் சிறு தானிய பொங்கல் திருவிழா



**கலசப்பாக்கம், ஜன. 14-**
கலசப்பாக்கத்தில் சிறு தானிய பொங்கல் திருவிழா நடைபெற்றது.

கலசப்பாக்கத்தில், தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு தமிழகத்தில் 21 மாவட்டங்களில் மாநில தலைவி ஷீலா தலைமையில் கடந்த 10/01/2023 அன்று ஐக்கிய நாட்டு சபை அறிவித்துள்ள சர்வதேச சிறு தானிய ஆண்டு 2023 சிறுதானிய பொங்கல் திருவிழா ஜனவரி 10 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர் நிகழ்வாக களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம் சார்பாக கலசப்பாக்கம் காக்கும் கரை விநாயகர் கோவிலில் பொங்கல், திருவிழா கொண்டாடப்பட்டது.

ஒன்றிய குழு தலைவி அன்பரசி ராஜசேகரன் தலைமையிலும், பச்சையப்பன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்.

ராஜேந்திரன் பாரம்பரிய விதை மையம், மீனாட்சிசுந்தரம் பாரம்பரிய விதை மையம், முன்னிலையிலும் சந்திரா ராமலிங்கம், சின்னகாளூர், காமாட்சி, குமரன், பதியவாடி சிவகாமி பில்லூர், ஆகியோர் பொங்கல் வைத்தனர். நிறைவாக பொங்கல் மற்றும் சிறுதானியங்கள் சேர்த்து வைத்து தீப ஆராதனை செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் பெண்கள் இணைப்பு குழு சுமதி ஒருங்கிணைப்பாளர், திருவண்ணாமலை மற்றும் செங்கம் வட்டம், ஜோஸ்பின் ராஜா பொருளாளர், ராஜா VWDS தொண்டு நிறுவனம், பாண்டியன் ஒருங்கிணைப்பாளர் போளூர் வட்டம், அனிதா செங்கம் வட்டம், சாந்தி தண்ராம்பட்டு வட்டம், மற்றும் களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம் ஆண்கள், முதியோர் சமூக ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். நிறைவாக உமா வரவேற்றார். சகுந்தலா நன்றி கூறினார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகள் அனைத்தும் பவானி ஒருங்கிணைப்பாளர் பெண்கள் இணைப்பு குழு செய்து இருந்தது.

# சிறுதானிய பொங்கல் விழா

**கொட்டடையூர், ஜன. 11–**

கடம்பத்தூர் ஒன்றியம், கொட்டடையூர் ஊராட்சியில், சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023ஐ முன்னிட்டு நேற்று, தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழு சார்பில் சிறுதானிய பொங்கல் விழா நடந்தது.

விழாவிற்கு திருவள்ளூர் மாவட்டம், சோழாவரம் வட்டார பெண்கள் இணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பானு முன்னிலை வகித்தார்.

தமிழ்நாடு மாநில செயற்குழு உறுப்பினரும், கடம்பத்தூர் ஒன்றியம், காந்திப்பேட்டை வட்டார ஒருங்கிணைப்பாளருமான அ.கமலா தலைமை வகித்தார்.

இதில், ஊராட்சி பகுதியைச் சேர்ந்த பெண் விவசாயிகள் மற்றும் பெண்கள் இணைப்புக் குழு உறுப்பினர்கள் சிறுதானிய பொங்கலிட்டு விழா கொண்டாடினர்.

விழாவில், அன்றாட வாழ்வில் சிறுதானியங்களைச் சேர்த்துக் கொள்ளும் வகையில் சிறுதானிய உற்பத்தியை பெருக்க வலியுறுத்தப்பட்டது.

மேலும், அரசின் நியாய விலைக் கடைகள் மற்றும் அனைத்து உணவு வழங்கும் திட்டங்களில் சிறுதானியங்களை வழங்க வேண்டும் என, கோரிக்கை விடுத்தனர்.

மேலும், சிறுதானியங்களின் பயன்கள் குறித்து விழாவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# தர்மபுரி சிறுதானிய மாவட்டமாக அறிவிப்பு

## விவசாயிகள் சங்கம் வரவேற்பு

**தர்மபுரி, ஜன.9:** ஐக்கிய நாடுகள் சபை 2023ம் ஆண்டை சிறு தானிய ஆண்டாக அறிவித்துள்ளது. இதே போல், தமிழ்நாடு அரசும், தர்மபுரி மாவட்டத்தை சிறு தானிய உற்பத்தி மாவட்டமாக அறிவித்துள்ளது. இதையொட்டி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம், மாவட்ட செயலாளர் பிரதாபன் தெரிவித்திருப்பதாவது: ஐநா நடப்பாண்டை சிறு தானிய ஆண்டாக அறிவித்துள்ளது. இதே போல், தமிழ்நாடு அரசும் தர்மபுரி மாவட்டத்தை சிறு தானிய உற்பத்தி மாவட்டமாக அறிவித்துள்ளதை வரவேற்கிறோம். பாரம்பரியமான சிறு தானியங்களை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க, உற்பத்தி அனைத்து செலவுகளையும் கணக்கிட்டு முழு செலவையும் மானியமாக சிறுதானிய சாகுபடி விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். சிறு தானியங்களுக்கு ஆதார விலை நிர்ணயம் செய்ய வேண்டும். சிறுதானிய வகைகளை மதிப்பு கூட்டும் பொருட்களை, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் வகையில், மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார்.



## சிறுதானிய பொங்கல் விழா



செல்லம்பட்டியில்

## சிறுதானிய பொங்கல் வைத்த பெண்கள்



செல்லம்பட்டியில் சிறுதானிய பொங்கல் வைத்த பெண்கள்.

உசிலம்பட்டி, ஜன. 12: செல்லம்பட்டியில் சிறுதானிய பொங்கல் வைத்து பெண்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மதுரை மாவட்டம் செல்லம்பட்டியில் தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழு சார்பில் சிறுதானிய உற்பத்தி, சிறுதானிய உணவுகளை சேர்த்துக் கொள்ள வேண்டும் என பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சிறுதானிய பொங்கல் விழா நடத்தினர். இதில் மாநிலத் துணைச் செயலாளர் ஜோதி தலைமையில் கீழப்பச்சேரி பெண் விவசாயிகள் சங்கம் செல்லம்மாள், பூபதி, மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் காமேஸ்வரி உசிலம்பட்டி சேடபட்டி வட்டார ஒருங்கிணைப்பாளர் உத்தப்புரம் காளியம்மாள் களப்பணியாளர்கள் தங்கச்செல்வி, லிங்கத்தாய் மற்றும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.



16 திண்டுக்கல் 10–2–2023

பெரியகுளத்தில்

## மீன்வளத்துறை ஆய்வாளருக்கு கொலை மிரட்டல்

பெரியகுளம், பிப்.10–

பெரியகுளத்தில் உள்ள தாமரைக்குளம் கண்மாயை முத்துப்பாண்டி என்பவர் மீன் பாசி குத்தகைக்கு எடுத்திருந்ததாகவும், குத்தகை காலம் முடிந்தும் பணம் செலுத்தாமல் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து முத்துப்பாண்டியின் குத்தகை ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில் கண்மாயில் மீன்பிடி உபகரணங்களை அப்புறப்படுத்தாமல் இருந்ததாக தெரிகிறது. கண்மாயில் இருந்த உபகரணங்களை அப்புறப்படுத்த மீன்வளத்துறை ஆய்வாளர் கவுதமன் மற்றும் அலுவலக ஊழியர்கள் நேற்று சென்றனர். அப்போது அங்கிருந்த முத்துப்பாண்டி, முத்தையா, சின்னசாமி உள்பட 7 பேர் சேர்ந்து அவர்களை அரசு பணி செய்ய விடாமல் தடுத்து கொலை மிரட்டல் விடுத்தனர். இது குறித்து கவுதமன் கொடுத்த புகாரின்பேரில் தென்கரை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



மரபணு மாற்று உணவுப்பொருளுக்கு எதிராக

## பெண்கள் குழுவினர் ஆர்ப்பாட்டம்

பெரியகுளம், பிப்.10–

பெரியகுளம், வடகரை பழைய பஸ்நிலையத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் மக்களை பாதிக்கும் மரபணு மாற்று உணவுப் பொருட்களை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மாநில செயற்குழு உறுப்பினர் சித்ரா தேவி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் சமூக ஆர்வலர் ஆலிம் அகமது முஸ்தபா, சர்வோதிப் தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் சங்கீதா, வக்கீல் ஜெயராமன் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு பொருட்களை பயன்படுத்துவதை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர்.

## கழிவுநீர் ஓடைக்குள் தவறி விழுந்த மாணவன் படுகாயம்

மூணாறு, பிப்.10–

நெடுங்கண்டம் பகுதியை சேர்ந்தவர் சுனில்குமார். இவருடைய மகன் ஸ்ரீஜித் (வயது 10). இவன் அப்பகுதியில் உள்ள பள்ளியில் 5–ம் வகுப்பு படித்து வருகிறான். நேற்று முன்தினம் காலையில் ஸ்ரீஜித் வழக்கம்போல் பள்ளிக்கூடத்துக்கு நடந்து சென்றுகொண்டிருந்தான். குமுளி–மூணாறு சாலையில் சென்ற போது, அங்கு திறந்து கிடந்த கழிவுநீர்

தற்போதைய நிகழ்வு

தமிழக குரல்™

# பெரியகுளத்தில் மரபணு மாற்றப்பட்ட உணவுப் பொருட்களை தடை செய்ய கோரி ஆர்ப்பாட்டம்




அ.பால்ஸ்டார்கிங்ஸ்லி

**பெரியகுளம்**

தேனி மாவட்டம், பெரியகுளம் வடகரை பழைய பேருந்து நிலைய வளாகத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் மக்களை பாதிக்கும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பொருட்களை எதிர்த்து, இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில், தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மாநில செயற்குழு உறுப்பினர் ஆர். சித்ரா தேவி தலைமை தாங்கினார். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் 20க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர். இந்திய யூனியன் முஸ்லிம் யூத் லீக் மாவட்ட செயலாளர் நூர் முகமது, சமூக ஆர்வலர் ஆலிம் அகமது முஸ்தபா, சர்வோதீப் தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் சங்கீதா, மற்றும் நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்

POSTAL REGD NO: 1

தின தரணி

காலை நாளிதழ்

DINA THARANI காலை நாளிதழ்

# பெரியகுளத்தில் மரபணு மாற்றப்பட்ட உணவுப் பொருட்களை தடை செய்ய கோரி ஆர்ப்பாட்டம்

தேனி,பிப்.10-




தேனி மாவட்டம், பெரியகுளம் வடகரை பழைய பேருந்து நிலைய வளாகத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு சார்பில் மக்களை பாதிக்கும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பொருட்களை எதிர்த்து, இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில், தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மாநில செயற்குழு உறுப்பினர் ஆர். சித்ரா தேவி தலைமை தாங்கினார். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் 20க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர். இந்திய யூனியன் முஸ்லிம் யூத் லீக் மாவட்ட செயலாளர் நூர் முகமது, சமூக ஆர்வலர் ஆலிம் அகமது முஸ்தபா, சர்வோதீப் தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் சங்கீதா, மற்றும் நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

## மரபணு மாற்று கடுகு விதையை அனுமதிக்காதே !

# கண்டன ஆர்ப்பாட்டம்

நாள் : **09.02.2023 வியாழக்கிழமை** காலை 10.00 மணி

இடம் : **போளூர்** பேருந்து நிலையம் எதிரில்,

தலைமை :

தோழர். **ச.சுமதி** ஒருங்கிணைப்பாளர்,
தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு, திருவண்ணாமலை

**கோரிக்கைகள்**

**மத்திய அரசே...**

- இயற்கைக்கு எதிரான மனித இனத்திற்கு கேடு விளைவிக்கக்கூடிய மரணுமாற்று கடுகு விதையை அனுமதிக்காதே !
- அனைத்துவிதமான களைக்கொல்லி (ம) பூச்சிகொல்லிகளை நாடு முழுவதும் தடை செய் !
- செயற்கையாக செறிவூட்டப்பட்ட அரிசிக்கு மாற்றாக ஊட்டசத்துமிக்க பாரம்பரிய அரிசி ரகங்களை வழங்கு !
- சமீபத்தில் அதிகரித்துள்ள உணவு கலப்படத்தை இரும்பு கரம் கொண்டு அடக்கு !
- நாடு முழுவதும் இயற்கை வேளாண்மையை அமுலாக்கு !

**பாதுகாக்கப்பட்ட உணவுக்கான சர்வதேச தினம் -பிப் 9**

நன்றியுரை : **கி.பழனி** கரைப்பூண்டி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்

**இங்ஙனம் :**

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்,**
**தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு,**
**பாரம்பரிய விதைகள் மையம்,**
திருவண்ணாமலை மாவட்டம்.

**தொடர்புக்கு : 9500435680**

கலைமகள் அச்சகம், போளூர். செல் : 9894431200

திருவண்ணாமலை காந்தி சிலை அருகே

# தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு மவுன போராட்டம்

திருவண்ணாமலை, பிப்.10-

திருவண்ணாமலை காந்தி சிலை அருகே நேற்று மரபணு மாற்று கடுகு விதையை அனுமதிக்ககூடாது என வலியுறுத்தி தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழுவினர் கறுப்பு ஆடை அணிந்து மவுன போராட்டத்தில் ஈடுபட்டனர்.



■ திருவண்ணாமலை காந்தி சிலை அருகே நேற்று மரபணு மாற்று கடுகு விதையை அனுமதிக்ககூடாது என வலியுறுத்தி தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழுவினர் கறுப்பு ஆடை அணிந்து மவுன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை காந்தி சிலை அருகே நேற்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு, பாரம்பரிய விதைகள் மையம் சார்பில் மவுன போராட்டம் நடைபெற்றது. பேராட்டத்துக்கு கமலக்கண்ணன் தலைமை தாங்கினார்.

இந்த மவுன போராட்டத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்புகுழு ஒருங்கிணைப்பாளர் ச.சுமதி, அனிதா, செந்தில் மற்றும் விவசாயிகள் சங்கத்தினர், பாரம்பரிய விதைகள் சங்கத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

இயற்கைக்கு எதிரான மனித இனத்திற்கு கேடு விளைவிக்ககூடிய மரபணு மாற்று கடுகு விதையை அனுமதிக்ககூடாது. அனைத்து விதமான களைக்கொல்லி மற்றும் பூச்சி கொல்லிகளை நாடு முழுவதும் தடை செய்ய வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று மாலை 3 மணி முதல் 4 மணி வரை ஒருமணி நேரம் இந்த மவுன போராட்டம் நடைபெற்றது.

### மரபணு மாற்று விதைகளுக்கு எதிராக

# ஒன்றிய அரசை கண்டித்து பெண்கள் விவசாய அமைப்பினர் ஆர்ப்பாட்டம்

உசிலம்பட்டி, பிப். 10: மரபணு மாற்று விதைகளுக்கு எதிராக ஒன்றிய அரசை கண்டித்து செல்லம்பட்டியில் நேற்று பெண்கள் அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



▶ உசிலம்பட்டி அருகே செல்லம்பட்டியில் ஒன்றிய அரசுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பெண்கள்.

உசிலம்பட்டி அருகே செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மற்றும் களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம் சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மக்களை பாதிக்கும் மரபணு மாற்று விதைகள் மற்றும் பிடி கடுகினை ஒன்றிய அரசு உடனடியாக தடை செய்ய வேண்டும் என வலியுறுத்தி இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மாநில துணை செயலாளர் ஜோதி தலைமை தாங்கினார்.

எஸ்கேஎம் விவசாயிகள் முன்னணி சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் சந்தானம் முன்னிலை வகித்தார். இதில் 100க்கும் மேற்பட்ட பெண் விவசாய சங்கத்தினர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். இதில் விவசாய சங்கி குழு மாவட்ட பொறுப்பாளர்கள் சிவகாமு, மாயராஜ், ரவிவர்மா, தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு நிர்வாகிகள் காமேஸ்வரி, பஞ்சவர்ணம், அனுசுயா, காளியம்மாள், தங்கச்செல்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருமங்கலம் நீதிமன்றத்தில்

காரிமங்கலம்

# அரசு பெண்கள் கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கம்



▶ காரிமங்கலம் அரசு பெண்கள் கல்லூரியில் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது.

காரிமங்கலம், பிப். 15: காரிமங்கலம் அரசு பெண்கள் கலை அறிவியல் கல்லூரியில், தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மற்றும் தோழி கூட்டமைப்பு சார்பில், 100 கோடி பெண்கள் எழுச்சி பிரசாரம் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் (பொ) ஜெயசீலன் தலைமை வகித்தார். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் செந்தில்குமார் வரவேற்றார். தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரங்கநாயகி, விழிப்புணர்வு பிரசாரம் மற்றும் கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசினார்.

தோழி கூட்டமைப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சரவணன், மனித உரிமை மண்டல ஒருங்கிணைப்பாளர் செந்தில் ராஜா, தொண்டு நிறுவன நிர்வாகிகள் சந்திரகலா, செயின்ட் தாமஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, பெண்களின் உரிமைகள் மற்றும் முன்னேற்றம் குறித்து பேசினர்.

இதற்கான ஏற்பாடுகளை பெண்கள் ஒருங்கிணைப்பு குழு நிர்வாகி விஜயலட்சுமி மற்றும் என்எஸ்எஸ் மாணவிகள் செய்திருந்தனர்.

# சமத்துவக் குரல்

R.DIS.NO.881/2021 SAMATHUVA KURAL TAMIL DAILY NEWS


## BREAKING NEWS 9:2:2023



**மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் செல்லம்பட்டி ஒன்றியத்தில் மக்களை பாதிக்கும் மரபணு விதைகள் மற்றும் தடை செய்யக்கோரி கண்டன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுகளஞ்சியம்பெண்விவசாயபெண்கள் 100பேர்கலந்துகொண்டனர்**


மாவட்ட வாரியாக செய்தியாளர் தேவை

விளம்பர தொடர்புக்கு 7305692174




தேனி மாவட்டம் பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை செவிலியர் கல்லூரியில் அகில உலக மகளிர் தின கருத்தரங்கு தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மாநில செயற்குழு உறுப்பினர் ஆர். சித்ராதேவி தலைமையில் நடைபெற்றது கருத்துரையாளர்களாக
அரசு செவிலியர் கல்லூரி முதல்வர் கண்ணம்மா பெரியகுளம் காவல் துணை கண்காணிப்பாளர் கீதா மருத்துவமனை கண்காணிப்பாளர் கே எஸ் குமார் மருத்துவர் ஆசியா ஆய்வாளர்கள் மீனாட்சி அன்னமயில் நகர் மன்ற தலைவர் சுமிதா மதுரை மாவட்டஒருங்கிணைப்பாளர் காமேஸ்வரி முனைவர் சகோ சகாய சங்கீதா மற்றும் மல்லிகா பத்மாவதி உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுக்கு கருத்துரை வழங்கினர்

ShareChat / Cholan News

தினமலர்

# பூரண மதுவிலக்கு அமல்படுத்த மகளிர் தினத்தில் வலியுறுத்தல்

**பெரியகுளம், மார்ச் 9–**

பூரண மதுவிலக்கு சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என மகளிர் தின கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

பெரியகுளம் மாவட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் அகில உலக பெண்கள் தினத்தை முன்னிட்டு பாலின சமத்துவத்திற்கான சம பங்கு கருத்தரங்கு நடந்தது. பெண்கள் இணைப்பு செயற்குழு உறுப்பினர் சித்ராதேவி தலைமை வகித்தார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் காமேஸ்வரி, செவிலியர் கல்லூரி முதல்வர் கண்ணம்மாள் முன்னிலை வகித்தனர். மருத்துவமனை கண்காணிப்பாளர் குமார், நிலைய அலுவலர் ஆசியா, டி.எஸ்.பி., கீதா, நகராட்சி தலைவர் சுமிதா, இன்ஸ்பெக்டர்கள் மீனாட்சி, அன்னமயில், சர்வோதீப் தொண்டு நிறுவன இயக்குனர் சகாயசங்கீதா உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். பெண்கள் மீதான வன்முறைகளுக்கு காரணமான மது உள்ளிட்ட போதை பொருட்களை தடை செய்து பூரண மதுவிலக்கு சட்டத்தை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கை யை வலியுறுத்தி பேசினர்.